பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 24 ஞாயிற்றுக்கிழமை 10.10.2021 கதிர் 203

## ஆணின் சடலம் மீட்பு!

மீரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிம்புலாவல கழிவுநீரோடையிலிருந்து 40 வயது நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பிரதேச மக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து, மீரிஹான பொலிஸார் கடற்படையினரின் உதவியுடன் சடலத்தை மீட்டுள்ளனர். ☞2

## மாப்பாண முதலியாரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்





**(இ.கலையமுதன்)**


யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் இறுதிக் கிரியைகள் நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று அமைதியான முறையில் இடம்பெற்றன. பூதவுடல் செம்மணி இந்து ☞2

# டிசெம்பர் மாதமளவில் மற்றுமோர் அலை!

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அபாய எச்சரிக்கை

**இலங்கையில் டிசெம்பர் மாதமளவில் மற்றுமொரு கொரோனா வைரஸ் தொற்று அலை உருவாகும் அபாயம் உள்ளது.**

**– இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் கமல் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.** ☞2



## மேலும் 115 பேர் சிக்கினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 115 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 80 ஆயிரத்து 475 பேர் ☞2

## முதல் பெண் மாவீரர் மாலதியின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல்

### சிறிதரன் எம்.பியின் காரியாலயம் இராணுவத்தால் முற்றுகை





தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் வித்தாகிப்போன முதலாவது பெண் மாவீரர் மாலதியின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்ட ☞2

## தொற்றின் ஆபத்து இன்னமும் உண்டு!

### சன்ன ஜயசுமன தெரிவிப்பு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று மற்றும் மரணங்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து வருவதால் தொற்று குறைந்துவிட்டது எனத் தவறாக எண்ண வேண்டாம்.

- இவ்வாறு மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் ☞2

## காணாமல்போன சிறுவன் வாய்க்காலில் சடலமாக மீட்பு



**(ந.லோகதயாளன்)**

யாழ்., சங்கானைப் பகுதியில் குளத்துக்குச் செல்லும் வாய்க்காலில் இருந்து 6 வயது சிறுவன் ஒருவனின் சடலம் மீட்கப் ☞2

## இராணுவத்தின் ஆண்டு விழாவில் கோட்டா சுமார் 10 ஆயிரத்து 936 பேருக்குத் தர உயர்வு



இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி இன்று அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாமில் பிரதான நிகழ்வு நடைபெற்றது.

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மாப்பாண .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மயானத்தில் நண்பகல் 12 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

மாப்பாண முதலியார் கடந்த வாரம் நோய்வாய்ப்பட்டு கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை இறைவனடி சேர்ந்தார்.

இந்நிலையில், இறுதிக்கிரியைகள் இன்று நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் அமைதியான முறையில் இடம்பெற்றது.

இதில் அரசியல் பிரமுகர்கள், ஆலயத் தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதன்போது வழிநெடுகிலும் பொதுமக்கள், வீதிகளில் நின்றவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சுகாதார நடைமுறைப்படி ஆரவாரங்கள் எதுவுமின்றி மிகவும் அமைதியான முறையிலே இறுதி ஊர்வலம் இடம்பெற்றது.

## மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## டிசெம்பர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா வைரஸ் தொற்று முடிவுக்கு வந்து விட்டது என நினைத்துச் செயற்பட்டால் இந்த நிலை ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு, நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் கொரோனா வைரஸ் தொற்றை மறந்து செயற்படுகின்றனர் எனவும் அவர் சாடியுள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை தொடர்ந்து அமுலில் இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஆணின் சடலம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரத்தக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம், களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மீரிஹான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துகொண்டார்.

இதேவேளை, இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 567 இராணுவ அதிகாரிகள் மற்றும் 10 ஆயிரத்து 369 படையினர் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைவாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்தத் தர உயர்வு வழங்கப்பட்டுள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 8 சிரேஷ்ட பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் நிலைக்கும், 17 கேர்ணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 42 லெப்டினன் கேர்ணல்கள் கேர்ணல் நிலைக்கும், 60 மேஜர்கள் லெப்டினன் கேர்ணல் நிலைக்கும், 256 கப்டன்கள் மேஜர் நிலைக்கும் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் 10 லெப்டினன் அதிகாரிகள் கப்டன் நிலைக்கும், 2ஆம் லெப்டினன்கள் அதிகாரிகள் 152 பேர் லெப்டினன் நிலைக்கும், 22 கெடட் நிலை அதிகாரிகள் லெப்டினன் (பொதுப்பணி) நிலைக்கும் 2021 ஒக்ரோபர் 10 ஆம் திகதி இன்று முதல் தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## முதல் பெண் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஈகச்சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

நினைவேந்தலைத் தடுக்கும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் காரியாலயத்துக்கு முன்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயம் அமைந்திருக்கும் வீதியின் நுழைவாயிலில் தடை அமைத்து அவ்வீதியால் செல்பவர்களுக்குத் தடைகளை ஏற்படுத்தினர்.

## தொற்றின் ஆபத்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் எதிர்காலத்தில் தீவிரமாகப் பரவல் அடையும் வைரஸாக மாற்றமடையாது என்று யாராலும் கூற முடியாது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பாக இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு ஒவ்வொரு நாளும் 200 பேர் இறக்கும் நாட்டில், தற்போது உயிரிழப்பு குறைவடைந்துள்ளது. எனினும், கொரோனாத் தொற்று முற்றிலும் போய்விட்டது என்று நினைப்பது மோசமானநிலையைத் தோற்றுவிக்கும்.

இந்த வைரஸ் மீண்டும் தீவிரமடையாது என்று எங்களால் உத்தரவாதம் அளிக்க முடியாது. மீண்டும் ஒரு புதிய அலை உருவாகி வருவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

நாட்டில் கொரோனாத் தடுப்பூசி திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இது தொடர்பான அனைத்து விவரங்களும் எதிர்காலத்தில் வெளியிடப்படும் - என்றார்.

## காணாமல் போன .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டுள்ளது.

சங்கானை, தேவாலய வீதியைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மதியத்திலிருந்து சிறுவன் காணாமல்போயிருந்த நிலையில், உறவினர்களும் பிரதேசவாசிகளும் அப்பிரதேசத்தில் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது நேற்றிரவு 9.30 மணியளவில் குறித்த வாய்க்காலில் சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


விளம்பர தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 076 740 3814




| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| வயது : 30 வயது ஆண்<br>மதம் : இந்து<br>ஜாதி: வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை<br>செவ் : குற்றம் இல்லை<br>தொழில்: கனடா<br>எதிர்பார்ப்பு:<br>பொருத்தமான மணகள் | வயது : 31 பெண்<br>மதம் : இந்து<br>ஜாதி : வேளாளர்<br>நட்சத்திரம் : அஸ்வினி<br>தொழில் : கனடா<br>எதிர்பார்ப்பு :<br>உள்நாடு / வெளிநாடு மணமகன் |
| வயது : 40 வயது ஆண்<br>மதம் : இந்து<br>ஜாதி: பள்ளர்<br>நட்சத்திரம்: மிருகசீரடம்<br>தொழில் : கனடா<br>எதிர்பார்ப்பு:<br>பொருத்தமான மணமகள் | வயது : 31 பெண்<br>மதம்: இந்து<br>ஜாதி : வேளாளர்<br>நட்சத்திரம் : மகம்<br>தொழில் : ஆசிரியை<br>எதிர்பார்ப்பு :<br>உள்நாட்டு படித்த மணமகன் . |

0776505097
0778876969

தலைமை அலுவலகம் ;
கனடா
001416661855

Personal
English Classes



K Ganesh (BA.Pera)
விரிவாக
விளக்கமாக
அவரவரது
நிலையிலிருந்து
Grade 7-
GCE OL AL
பட்டதாரிகள் ,
தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நெருக்கடியில் நாடு

**கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிப்பீடத்தில் ஏற்றியமையின் விளைவை – விலையை – இலங்கை மக்கள் அடுத்து வரும் வாரங்களில் நன்கு உணரும் நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.**

**நாட்டில் பணவீக்கம் மோசமான நிலையை தொட்டுள்ளது. ரூபாவின் பெறுமதி அதலபாதாளத்தில் விழுந்து விட்டது. தனது நிதி நெருக்கடிகளைச் சமாளிக்க அரசு ஒன்றில் வெளிநாட்டுக் கடன்களை வாங்கி தள்ளுகின்றது. அல்லது நாட்டின் தேசிய சொத்துக்களை விற்று வீணாக்குகிறது. அல்லது பண நோட்டுக்களை கண்மூடித்தனமாக அச்சிட்டு புழக்கத்தில் விடுகின்றது.**

**பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைந்திருக்கும் நிலையில், கோதுமை மா, எரிவாயு, சீமெந்து, பால் மா போன்றவற்றின் விலைகள் உயரும் சூழ்நிலை காணப்படுகின்றது.**

**12.5 கிலோ எடையுள்ள சமையல் எரிவாயுவின் விலை 500 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 20 ரூபாவினாலும் அதிகரிக்கும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. இதனால் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளும் கூடும். அதே நேரம் தேநீர், பணிஸ் உட்பட சாமானியர்களின் உடனடி உணவுப் பண்டங்களின் விலையும் இருபது வீதத்தினால் கூடும் சாத்தியம் தென்படுகின்றது. இந்த விலை உயர்வுகளையும் நெருக்கடிகளையும் சாமானிய மக்கள் – அன்றாடம் காய்ச்சிகள் – எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி.**

**நாட்டின் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. எல்லாப் பின்னடைவுகளுக்கும் கொரோனா மீது குற்றத்தைச் சுமத்தித் தான் தப்பப் பார்க்கின்றது கோட்டா அரசு.**

**ஒருபுறம் கொரோனா நெருக்கடி நாட்டை சூழ்ந்து இக்கட்டில் மாட்ட, அதேசமயம் இன்னொரு போர் முகத்தைத் தானே தேடித் திறந்து அதில் போய் விழுந்திருக்கிறது அரசுத் தலைமை. காலாகாலமாக சேதனப் பசளைகள், உர வகைகளில் விவசாயம் செய்துவந்த நம் நாட்டு விவசாயிகளுக்கு அசேதன உரங்களையும் இரசாயனப் பசளை வகைகளையும் அசேதன இரசாயனங்களை கொண்ட கிருமிநாசினிகளையும் பயன்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தி, ஊக்குவித்து, தூண்டி, வழிப்படுத்தியதே அரசின் விவசாய அமைச்சுத்தான்.**

**இப்போது அவற்றுக்குரிய மாற்று ஏற்பாடுகளைச் செய்யாமல் ஒரேயடியாக அசேதன உரங்களுக்கு தடைவிதித்து, அந்த முடிவில் ஒற்றைக்காலில் நின்று, வீம்புத்தனம் பண்ணி, முழு நாட்டையும் மேலும் நெருக்கடிக்குள் உள்ளாக்கி இருக்கின்றது இந்த அரசு.**

**ஒருபுறம் மோசமான பொருளாதார நிலைமை. மறுபுறம் பொருத்தமற்ற சமயத்தில் விவசாயம் தொடர்பில் அரசு எடுத்த முட்டாள் தனத்தினால் உற்பத்தி வீழ்ச்சி. இவையெல்லாம் சேர்ந்து கொரோனாவினால் பாதிக்கப்பட்ட நாட்டை பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக மேலும் நசுக்கும் இக்கட்டு.**

**இத்தகைய நெருக்கடி நிலைமை – மிக மோசமான சூழல் – விரைந்து வந்து கொண்டிருக்கின்றது என்று இப்பகுதியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்தோம்.**

**இப்போது நெருக்கடி நிலைமை கழுத்துக்கு வந்துவிட்டது. அது வாசல் கதவைத் தட்டுகிறது. மீள முடியாமல் மக்கள் துடித்துப் போய் இருக்கின்றார்கள். இனி, பசியும் பட்டினியும் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் என்று அவலம் தொடரப் போகின்றது. இந்த நெருக்கடியிலிருந்து நாடு உடனடியாக மீளும் என்பதற்கான சாத்தியங்கள் தென்படவே இல்லை.**

# முதல் கட்டமாக வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முடிவு

### கல்வி அமைச்சு அறிவிப்பு

வடக்கு மாகாணத்தில் முதல் கட்டமாக ஆரம்பப் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு மாகாண கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளது.

200 மாணவர்களுக்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளை, எதிர்வரும் ஒக்ரோபர் 21ஆம் திகதி வியாழக்கிழமை மீள ஆரம்பிப்பதற்கு அனைத்து மாகாண ஆளுநர்களும் கூட்டாகத் தீர்மானித்தனர். எனவே, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதற்கான விழிப்பூட்டல்களை அந்தந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பைக் கோருவது எனவும் ஆளுநர்களால் தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில், வடக்கு மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட 680 ஆரம்பப் பாடசாலைகள் ஒக்ரோபர் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பை வடக்கு மாகாண கல்வி அமைச்சுக் கேட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக, 6 மாதங்களாகப் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளை மீண்டும் திறக்க ஆசிரியர்களின் ஆதரவு அவசியம்

### மஹிந்தானந்த கோரிக்கை



பாடசாலை நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கு அதிபர்களும் ஆசிரியர்களும் ஆதரவை வழங்க வேண்டும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் தானும் உறுதியாக இருக்கிறேன் என அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்று காரணமாக மாணவர்கள் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக கல்வியை இழந்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே அவர்களுக்காக மீண்டும் கல்வி நடவடிக்கையை தொடங்கும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஆதரவை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.



# பிக்பாஸ் நிகழ்ச்சியில் யொஹானி டி சில்வா!

மெனிகே மகே ஹித்தே பாடல் மூலம் சர்வதேச அளவில் பிரபலமானவர் யொஹானி. குறித்த பாடல் யூடியூபில் 10 கோடி பார்வைகளை கடந்து சாதனை படைத்து வருகிறது.

இதனையடுத்து இந்தியாவில் இருந்து அழைப்பு வர இந்தியா சென்று ஹிந்தி பாடல் ஒன்றையும் அவர் பாடியுள்ளார்.

குறித்த பாடலும் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில், ஹிந்தியில் ஒளிபரப்பாகும் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியான பிக்பாஸ் சீசன் 15 இல் யொஹானி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டுள்ளார்.

பிரபல பொலிவுட் நடிகர் சல்மான் கான் இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் நிலையில் சல்மான் கானுடன் இணைந்து யொஹானி ''மெனிகே மகே ஹித்தே'' பாடலை பாடும் டீசர் வெளியாகி உள்ளது.

குறித்த நிகழ்ச்சி ஹிந்தி கலர்ஸ் டீவியில் நேற்று இரவு 9.30 மணிக்கு ஒளிப்பரப்பாகி உள்ளது.

# ஒருவாரத்தில் மட்டும் 106 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை அச்சிட்டது மத்திய வங்கி!

*2021 ஆம் ஆண்டு ஐப்பசி மாத தொடக்கத்தில் இருந்து இதுவரை இலங்கை மத்திய வங்கி 106 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை அச்சிட்டுள்ளது.*

*இந்த மாதத்துக்கு அச்சிடப்பட்ட 106 பில்லியன் ரூபா, மத்திய வங்கியின் மொத்த கருவூல பங்குகளை 1,442 பில்லியன் ரூபாவாக கொண்டு வந்துள்ளது. மேலும் இந்த ஆண்டு மட்டும் இதுவரையில் 700 பில்லியன் ரூபாமிதிக்கு மேல் அச்சிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.*







# ஆப்கான் தற்கொலைத் தாக்குதல்; உரிமை கோரியது ஐ.எஸ். அமைப்பு

ஆப்கானிஸ்தானின் குண்டூஸ் நகர் பகுதியில்உள்ளபள்ளிவாசலில் இடம்பெற்றதற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு, ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டமையுடன், 100 பேருக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கப் படையினர் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியதன் பின்னர் இடம்பெற்ற மிகப்பெரிய தாக்குதல் சம்பவம் இதுவென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# லெபனானில் மின் தடை தொடர்ந்து நீடிக்குமாம்



லெபனானில் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அங்கு முழுமையாக மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் இரண்டு மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையங்களும் எரிபொருள் இன்மையால் செயலிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுதல் இந்தமின்துண்டிப்பு ஏற்பட்டுள்ளதோடு மின்சாரத்தை மீள வழங்குவதற்குப் பல நாள்கள் செல்லும் என அந்நாட்டு அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18 மாதங்களாக லெபனானில்கடுமையானபொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாரிய எரிபொருள் தட்டுப்பாடும் நிலவுகின்றது.

இதன்காரணமாக லெபனானின் மொத்த சனத்தொகையில் பெரும்பாலானோர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களும் வலுப்பெற்றுள்ளன.

லெபனானில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாகத் தனியார் மின் பிறப்பாக்கிகளையும் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன

# ஆட்சியை சீர்குலைக்க எண்ண வேண்டாம் தலிபான்கள் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை




ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியை சீர்குலைக்க எண்ண வேண்டாம் எனதலிபான்கள்அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

கத்தார் தலை நகரான டோஹாவில் முதன் முறையாக நேற்று அமெரிக்க அதிகாரிகளுக்கும் தலிபான்களுக்கும் இடையில் பேச்சு நடைபெற்றது.

இதன்போதே, ஆப்கானில் தற்போதுள்ள ஆட்சியை சீர்குலைக்க நினைத்தால் அனைவருக்கும் பிரச்சினைதான் என தலிபான் வெளிவிவகார அமைச்சர் அமீர்கான் முத்தாக்கி தெரிவித்தார்.

மேலும் கொரோனா நோய்க்கு எதிராக ஆப்கான் மக்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கு அமெரிக்கா போன்ற நாடுகள் உதவ வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, இரண்டாவது நாளாக இன்றும் டோஹாவில் அமெரிக்காவுடன் தலிபான்கள் பேச்சு நடத்தவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## பிலிப்பைன்ஸ்- ரஷ்ய ஊடகவியலாளர்களுக்கு

# நோபல் பரிசு!

பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஊடகவியலாளர் மரியா ரெஸாவும் ரஷ்ய ஊடகவியலாளர் டிமித்ரி முராடோவும் இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தங்கள் நாட்டு அரசாங்கங்களின் அடக்குமுறையையும் மீறி, ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக போராடி வருவதற்காக அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிலாவில் பிறந்த மரியா ரெஸா சிறு வயதிலேயே அவரது தாயாருடன் அமெரிக்காவில் குடியேறினார். சி.என்.என். வால் ஸ்ட்ரீட் ஜர்னல் போன்ற பல்வேறு அமெரிக்க ஊடகங்களில் பணியாற்றியுள்ள இவருக்கு, ஏற்கெனவே 2018ஆம் ஆண்டில் சுதந்திரத்துக்கான தங்கப் பேனா விருதும் இந்த ஆண்டில் யுனெஸ்கோவின் உலக ஊடக சுதந்திரப் பரிசும் வழங்கப்பட்டுள்ளது.

58 வயதான மரியா ரெஸா, பிலிப்பைன்ஸில் போதை மருந்து கடத்தல் மற்றும் விற்பனைக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் ஜனாதிபதி ரோட்ரிகோ நிகழ்த்திய படுகொலைகளை வெளிச்சம் போட்டுக் காட்டிய ‘ராப்ளர்’ என்ற செய்தி வலைதளத்தை கடந்த 2012ஆம் ஆண்டில் உருவாக்கினார்.

அதே போல், ரஷ்யாவில் நடுநிலையான ‘நோவயா கெஸட்டா’ நாளிதழை கடந்த 1993ஆம் ஆண்டில் தொடங்கியவர்களில் டிமித்ரி முராடோவும் ஒருவர். தற்போது அந்த நாட்டின் மிகவும் நடுநிலையான, அதிகாரத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட நாளிதழாக நோவயா கெஸட்டா திகழ்கிறது.






# சவுதி அரேபியா விமான நிலையம் மீது ஆளில்லா விமானத் தாக்குதல்

ஏமன் எல்லைக்கு அருகில் உள்ள சவுதி அரேபியாவின் ஜசான் நகரில் விமான நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 10 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) மாலை நடந்த தாக்குதல்கள் கிங் அப்துல்லா விமான நிலையத்தை குறிவைத்ததாக சவுதி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் குறைந்தது ஐந்து பேருக்கு லேசான காயங்கள் மட்டுமே ஏற்பட்டன, மற்ற ஐந்து பேரின் நிலை உடனடியாக தெரியவில்லை. முதல் ஏவுகணை ஆளில்லா விமானத்திலிருந்து வீசப்பட்டது. இது விமான நிலையத்தின் முகப்பு ஜன்னல்களை உடைத்தது. இதில் காயமடைந்தவர்களில் ஆறு சவுதிகள், மூன்று பங்களாதேஷ் பிரஜைகள் மற்றும் ஒரு சூடானியர்கள் அடங்குகின்றனர் எனராய்ட்டர்ஸ் செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது. இரண்டாவது வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட ஆளில்லா விமான தாக்குதல் சனிக்கிழமை அதிகாலையில் இடைமறிக்கப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு உடனடி பொறுப்பை யாரும் ஏற்கவில்லை, ஆனால் சமீபத்தில் சவுதி இலக்குகளுக்கு எதிரான பல தாக்குதல்கள் ஏமனின் ஹௌதி படைகள் மீது குற்றம் சாட்டப்பட்டன.

சவுதி தலைமையிலான கூட்டணிக்கு எதிராக ஹவுத்திகள் போராடி வருகின்றனர், அங்கு அகற்றப்பட்ட அரசாங்கத்தை மீண்டும் நிறுவ ஹௌதி படைகள் முயற்சிக்கின்றன.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# ஸ்டாலினின் பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு முடிவு



தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பாதுகாப்பிற்காகச் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தலைநகர் சென்னையில்தலைமைச்செயலாளர், உள்துறைச் செயலாளர், டி.ஜி.பி. ஆகியோர் அடங்கிய ஆலோசனைக் கூட்டத்தில் இந்த விடயம் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வாகனங்களை நிறுத்தாமல் மற்ற வாகனங்களுடன் சேர்ந்தே முதல்வரும் செல்லும் வகையில் ஏற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. வழக்கமாக முதல்வரின் பாதுகாப்பிற்காகச் செல்லும் 12 முதல் 13 வாகனங்களின் எண்ணிக்கையைத் தற்போது ஆறாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசல் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைக் கருத்தில்கொண்டு இந்த முடிவினை முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆலோசனையின் பேரில் எடுத்துள்ளோம் என முதல்வரின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## டெல்லியில் மின் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் மாநில முதல்வர் கெஜ்ரிவால் முன்னறிவிப்பு



இந்தியாவின் தலைநகர் டெல்லியில் மின் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருப்பதாகக் கூறியுள்ள முதல்வர் கெஜ்ரிவால், அதுபோன்ற ஒரு சூழலைத் தவிர்க்க தனது அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

டெல்லிக்கு மின் விநியோகம் அளிக்கும் நிறுவனங்களுக்கு தேவையான நிலக்கரி மற்றும் எரிவாயு கிடைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடிக்கு தான் கடிதம் எழுதியுள்ளேன் எனவும் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதலே நிலக்கரிக்குத் தட்டுப்பாடு நீடிப்பதாக பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன் எனவும் கெஜ்ரிவால் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

நிலக்கரித் தட்டுப்பாடு தொடர்பாக ஆந்திர மாநில முதல்வரும் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிலக்கரித் தட்டுப்பாடு குறித்து ஆந்திர முதல்வர் அவசர கடிதம்



ஆந்திர அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு போதிய நிலக்கரியை ஒதுக்கீடு செய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுத்து ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஆந்திராவில் மின் உற்பத்தி நிலையங்களில் நிலக்கரி கையிருப்பு ஓரிரு நாள்களுக்கே போதுமானதாகும் என்பதால் அவசர உதவி கோரி மாநில முதல்வர் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார். மாநிலத்தின் ஒட்டு மொத்த மின்தேவையில் 45 சதவீதத்தை வழங்குகின்ற ஆந்திர மின் உற்பத்திக் கழகத்தின் நிலக்கரி கையிருப்பு ஓரிரு நாள்களுக்கே போதுமானதாக உள்ளது என்றும், பற்றாக்குறை காரணமாக மின் உற்பத்தி நிலையங்கள் 50 சதவீத திறனில் மட்டுமே தற்போது இயங்குகின்றன எனவும் குறித்த கடிதத்தில் அவர் தெரிவித்திருக்கிறார்.

மின்பற்றாக்குறையை ஈடுகட்ட பெருமளவில் வெளிச்சந்தையை சார்ந்திருப்பதாகவும், விலையும் யுனிட் 4 ரூபா 60 காசுகள் என்ற நிலையில் இருந்து 15 ரூபாவாக உயர்ந்திருப்பதாகவும் ஜெகன் மோகன் ரெட்டி குறிப்பிட்டுள்ளார். இந்த நெருக்கடியான நிலையைச் சமாளிக்க ஆந்திர அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு போதிய நிலக்கரியை ஒதுக்கீடு செய்ய ஜெகன்மோகன் ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.



## ஜெயலலிதா, சசிகலா ஆகியோரின் எஸ்டேட் வங்கிக் கணக்குகள் முடக்கம்

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவரது தோழி சசிகலா ஆகியோருக்குச் சொந்தமான கொடநாடு, கர்சன் எஸ்டேட் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என வருமான வரித்துறை தெரிவித்திருக்கிறது.

2017ஆம் ஆண்டு வருமான வரித்துறைச் சோதனைக்குப் பிறகு, சசிகலா மற்றும் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்துக்களை முடக்க பல்வேறு கட்ட நடவடிக்கைகளை வருமான வரித்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். சமீபத்தில் பினாமி சட்டத்தின்கீழ் சசிகலாவுக்குச் சொந்தமான சுமார் ரூபா 100 கோடி மதிப்புள்ள பையனூர் பங்களாவை வருமான வரித்துறையினர் முடக்கம் செய்தனர். அதுமட்டுமல்லாமல் இதுவரை சுமார் 2,000 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகளை முடக்கி வருமான வரித்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தற்போது வரி பாக்கி நிலுவையில் இருந்த நிலையில் ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்குச் சொந்தமான கோடநாடு, கர்சன் எஸ்டேட் கணக்குகளை வருமான வரித்துறை முடக்கியிருக்கிறது. வருமான வரித்துறைக்கே வரி பாக்கி நிலுவையில் இருப்பதன் காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக வருமான வரித்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகனின் கைது விவகாரத்தால் ஷாரூக் நற்பெயருக்கும் சிக்கல்



சமீபத்தில் போதைப்பொருள் வழக்கில் நடிகர் ஷாரூக்கானின் மகன் ஆர்யன்கான் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பைக் கிளப்பியது. இது, ஷாரூக்கானின் விளம்பர ஒப்பந்தங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பெங்களூருவைச் சார்ந்த இணையவழிக் கற்றல் நிறுவனமான பைஜுஸ், தனது நிறுவனத்துக்கான விளம்பரப் படங்களில் ஷாரூக்கானை நடிக்க வைத்திருந்தது. ஆனால், தற்போது அவருடைய மகன் போதைப்பொருள் விவகாரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளமையால் அந்த நிறுவனம் மீது பல்வேறு விமர்சனங்கள் வந்ததையடுத்து, தங்களுடைய விளம்பரப்படங்களில் இருந்து ஷாரூக்கானை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

2017ஆம் ஆண்டுமுதல் பைஜூஸ் நிறுவனத்துக்கான விளம்பரத்தூதுவராக அவர் செயற்பட்டுவந்தார். இதற்காக ஆண்டுதோறும் 4 கோடி ரூபா வரை சம்பளமாக அவர் வாங்கியுள்ளார். பைஜூஸ் நிறுவனம் குறுகிய காலத்திலேயே அதீத வளர்ச்சியை அடைந்ததற்கு ஷாரூக்கானின் பங்களிப்பும் முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சையால், ஷாரூக்கான் நடித்த விளம்பரங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனினும் அவர் தொடர்ந்து அந்த நிறுவனத்தின் விளம்பரங்களில் இடம்பெறுவாரா இல்லையா என்பது இன்னும் சில தினங்களில் தீர்மானமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவிப்பு

வடக்கு கிழக்கில் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தயாராகவுள்ளதாகவும், மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் வடக்கு கிழக்கு மாகாணசபைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கில் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகவேயிருக்கின்றோம்.வடக்கு மாகாணசபையினையும் கிழக்கு மாகாணசபையினையும்நாங்கள்கைப்பற்றுவோம். ஆனால்தேர்தல் நடக்குமா இல்லையா என்பதைவரவுசெலவுதிட்டவாக்கெடுப்புக்கு பின்னர் முன்னெடுக்கப்படும் என்றார்.

'3,000 பனை விதைகள் நடும் வாலிபர்கள்' என்னும் தலைப்பில் பனை விதைகள்நடும்வேலைத்திட்டம் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பாலமீன் மடு பகுதியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், வரவு செலவுத் திட்டம் பூர்த்தியடைந்த பின்னரே மாகாண சபை தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் அறிவிப்பின் உண்மைத் தன்மையினை அறிந்துகொள்ளமுடியும் என தெரிவித்துள்ளார்.

பனையானது தமிழர்களின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். கொழும்பு காலிமுகத்திடலில் பெருமளவான பனைமரங்கள் நடப்பட்டிருந்தன. 2012ஆம் ஆண்டு அந்த பனை மரங்கள் அகற்றப்பட்டு தென்னை மரங்கள் நடப்பட்டன. கொழும்பில் தமிழர்கள் வாழ்ந்துள்ளார்கள்.இந்த பனைமரங்கள் அந்த வரலாற்றினை கூறும் என்ற காரணத்தினால் அந்த பனை மரங்கள் அகற்றப்பட்டன. பனை தமிழர்களின் வாழ்வுடன் பிணைந்தது என்பதற்கு இதனைவிட வேறு உதாரணங்கள் இல்லை.

பசில் ராஜபக்ஷ மாகாணசபைத் தேர்தலை நடாத்தப்போவதாக அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.13வது அரசியலமைப்பு இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஊடாக வடக்கு கிழக்கு இணைப்பாக வந்தாலும் கூட, ஜே.வி.பி. வழக்கு தாக்கல் செய்ததன் காரணமாக 2006ஆம்ஆண்டு அது பிரிக்கப்பட்டது.அதன் பின்னர் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் இரு தடவையும் வடமாகாணசபைத் தேர்தல் ஒரு தடவையும் நடைபெற்றுள்ளன .



அதன்பின்னர் எந்தவொரு மாகாணசபைத் தேர்தலும் நடைபெறவில்லை. தற்போது இந்திய அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட அழுத்தங்கள் காரணமாக மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதாக கூறியிருக்கின்றார்கள்.

எனினும் பசில் ராஜபக்ஷவின் அறிவிப்பானது பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அதற்கு முன்னோடியாக இவ்வாறான அறிவிப்பினை வெளியிட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் உள்ளது.

வரவுசெலவுதிட்ட வாக்கெடுப்பு டிசெம்பர் மாதம் முடிவுற்றதன் பின்னர் அவர்களின் மனநிலையில் என்னமாற்றம் வருகின்றது என்பதை யாரும் சொல்லமுடியாது என்றார்.




# தங்களுக்குரிய தபால் நிலையத்தினை இடம் மாற்றக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

தங்களுக்குரிய தபால் நிலையத்தினை மீளவும் தங்கள் பிரதேசத்திற்கு இடம் மாற்றி தருமாறு கேட்டு நேற்று மட்டக்களப்பு வாகநேரி பிரதேசத்தில் பிரதேச மக்கள் சிலர் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று மதியம் வாகநேரி பிள்ளையார் ஆலய வீதியில் ஒன்று கூடிய மக்கள் பதாதைகளை கையில் ஏந்தியவாறு 'எங்களுக்கு தபால் நிலையம் வேண்டும்' என கோஷங்களை எழுப்பி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தங்கள் பிரதேத்தில் இருந்த வாகநேரி தபால் நிலையம் யுத்த சூழ்நிலை காரணமாக காவத்தமுனை ஓட்டமாவடி பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அப் பகுதியிலேயே செயற்பட்டு வருவதாகவும் கூறுகின்றனர்.

தங்களுக்குரிய தபாலகம் சார்ந்த பல்வேறு செயற்பாடுகள் நிறைவேற்றுவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வருகிறோம் என கூறுகின்றனர்.

மாதாந்தம் அரசினால் வழங்கப்படும் முதியோர் கொடுப்பனவு மற்றும் மாதாந்த பொதுசன உதவிப் பணம் போன்றவற்றை பெறும் முதியவர்கள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் 10 கிலோ மீற்றர் தூரம் கால்நடையாகவும் முச்சக்கர வண்டியிலும் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

250 ரூபா பொதுசன உதவிப் பணத்தினைப் பெறுவதற்கு முச்சக்கரவண்டிக்கான கூலி 1,000 ரூபா வழங்கவேண்டியுள்ளதாக கவலைதெரிவிக்கின்றனர். எனவேநீண்டகாலப் பிரச்சினையான இவ் தபாலகத்தினை மீண்டும் தங்கள் பிரதேசத்திற்கு இடமாற்றி தந்துதவுமாறு கேட்கின்றனர்.

# களுவாஞ்சிகுடி பகுதியில் இளம் யுவதி தற்கொலை

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துறைநீலாவணை பிரதேசத்தைச்சேர்ந்த மோகநாதன் –சறோஜினி வயது 22 என்பவர் தனது வீட்டின் அறையில் தற்கொலை செய்து கொண்ட நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது தாயினை இழந்த நிலையில் தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்த குறித்த யுவதி தனது வீட்டில் இருந்த தங்க நகைகளை அடகு வைப்பதற்காக நெருங்கிய உறவினர் ஒருவருக்கு கொடுத்திருந்தார் எனவும் அதனை நேற்று மீட்டுதருகிறேன் என தனது தந்தையிடம் கூறியிருக்கின்றார். இந்நிலையில் குறித்த யுவதி தனது வீட்டு அறையினுள் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் அவரின் சகோதரன் கண்டுள்ளார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை – ஜீவரெத்தினம் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.களுவாஞ்சிகுடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு ஆறு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது

திருகோணமலை – அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு டிரக்டர்களுடன் ஆறு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தளாய் மற்றும் அக்போபுர பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

அக்போபுர சீனி ஆலை மூன்றாவது வலயத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டபோது சூரியபுர விசேட அதிரடிப் படையினரால் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சூரியபுர விசேட பொலிஸாரும் அக்போபுர பொலிஸாரும் இணைந்து அவர்களை கைது செய்துள்ளனர்.



இந்நிலையில் சந்தேகநபர்களை கந்தளாய் நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# ஐ.பி.எல்.தொடரின் பிளே ஓவ் சுற்று ஆரம்பம் முதல் போட்டியில் டெல்லி – சென்னை மோதல்



ஐ.பி.எல். தொடரின் பிளே ஓவ் சுற்றின் முதலாவது ஆட்டம் இன்று டுபாயில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடித்த டெல்லி கப்பிட்டல்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதவுள்ளன. இதில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குள் நுழையும் என்பதோடு தோல்வி அடையும் அணிக்கு மற்றுமொரு வாய்ப்பும் கிடைக்கும்.

நாளை சார்ஜாவில் நடக்கும் போட்டியில் புள்ளிப்பட்டியலில் 3 ஆவது மற்றும் 4 ஆவது இடங்களைப் பெற்ற பெங்களூரு மற்றும் கொல்கத்தா அணிகள் மோதவுள்ளன. இதில் தோற்கும் அணி தொடரிலிருந்து வெளியேறும் என்பதோடு வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதிச் சுற்றில் தோல்வியடைந்த அணியுடன் மோதும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.எஸ்.எல். கால்பந்தாட்டத்தொடர் பரிசுத்தொகை விவரம் அறிவிப்பு




எட்டாவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் 19 ஆம் திகதி கோவாவில் தொடங்குகிறது. மார்ச் மாதம் வரை நடக்கும் இந்தத் தொடரில் 11 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தத் தொடருக்கான பரிசுத்தொகை விவரத்தை இந்திய கால்பந்து விளையாட்டு மேம்பாட்டு அமைப்பு அறிவித்துள்ளது. தொடருக்கான மொத்தப் பரிசுத்தொகை இந்திய நாணய மதிப்பில் ஐந்தரைக் கோடியாகும். இதில் லீக் சுற்று முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தைப் பிடிக்கும் அணிக்கு கடந்த 2 ஆண்டுகளாக தனியாக சிறப்புக் கிண்ணத்துடன் ரூபா.50 லட்சம் வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை தற்போது ஒன்றரைக்கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதே சமயம் சம்பியன் பட்டத்தை வெல்லும் அணிக்குரிய பரிசுத்தொகை 8 கோடியில் இருந்து 6 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இரண்டாமிடம் பிடிக்கும் அணிக்கு வழங்கப்பட்டு வந்த 4 கோடியும் 3 கோடிக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய அறிவிப்பின்படி, புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பிடிக்கும் அணியே இறுதிப் போட்டியிலும் வெற்றியடைந்தால் மொத்தமாக ஒன்பதரைக் கோடியை பரிசாகப் பெறலாம். அத்துடன் புள்ளிப்பட்டியலில் முதலிடம் பெறும் அணிக்கு, ஆசிய கழக சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பும் கிடைக்கும்.



## ஓமானுடனான ரி–20 தொடரை இலங்கையணி கைப்பற்றியது

ஓமான் அணியுடனான இரண்டாவது ரி-20 போட்டியிலும் வெற்றி பெற்ற இலங்கை கிரிக்கெட் அணி, தொடரினையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியிருக்கின்றது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் ரி-20 போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்று 1-0 என முன்னிலை அடைந்த நிலையில் தொடரின் இரண்டாவது போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஓமான் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்தது. ஓமான் அணியின் ஆகிப் இல்யாஸ் 59, பிரஜாபதி 22 ஓட்டங்களைஎடுத்தனர். இலங்கை அணியின் சமிக்க கருணாரட்ன மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 17.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கினை அடைந்தது. இலங்கை அணியின் ஆறாவது விக்கெட்டுக்காக சமிக்க கருணாரட்ன, பானுக ராஜபக்ஷ ஜோடி 74 ஓட்டங்களைச் சேர்த்ததோடு, இருவரும் ஆட்டமிழக்காது தலா 35 ஓட்டங்களையும் எடுத்தனர். ஓமான் அணியின் மெஹமட் நதீம் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

## ஆப்கானிஸ்தானின் ரி–20 உலகக்கிண்ண ஆலோசகராக அன்டி பிளவர் நியமனம்



*2021 ஆம் ஆண்டுக்கான ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக முன்னாள் சிம்பாப்வே அணியின் தலைவரும் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளருமான அன்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார். அண்டி பிளவர் ஆப்கான் அணியுடன் இணைந்ததில் மகிழ்ச்சியடைகிறோம் எனவும் அவரது அனுபவம் உலகக் கிண்ணத் தொடரில் தமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் அஜிசுல்லா ஃபாஸ்லி கூறியுள்ளார்.*

*ஆப்கானிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் தென்னாபிரிக்க சகலதுறை வீரர் லான்ஸ் க்ளூஸ்னரும், பந்துவீச்சுப் பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் ஷோன் டைட்டும் செயற்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# வாழ்க்கையில் வேகமாக முன்னேற வழி

ஒரு மனிதனை முன்னேற்றப்பாதையில் அழைத்து செல்வது அவனுடைய எண்ணம் தான் 'எண்ணம் போல் வாழ்க்கை'. 'நாம் எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுவடை செய்ய முடியும்'. உங்கள் வாழ்க்கையை உயரத்திற்கு நீங்களே கொண்டு செல்ல வேண்டும் என்றால், அது உங்கள் எண்ணத்தில் தான் உள்ளது.

எக்காரணத்தைக் கொண்டும் உங்கள் மனதையும், எண்ணத்தையும் சிதறவிடாமல் ஒருநிலைப்படுத்தி நல்ல முறையில் வழி நடத்தினால் மட்டுமே வாழ்க்கையில் வெற்றி இலக்கை அடைய முடியும்.

இதில் சொல்லப்படும் குறிப்புகள் எல்லோரும் அறிந்ததாக இருந்தாலும், அதை நீங்கள் மறுபரிசீலனை செய்து உங்கள் வாழ்க்கையை நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள்.

படித்ததோடு விட்டுவிட்டால் அதன் பலன் நமக்கு தெரியாது. நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தி பார்க்கும் போதுதான் அதன் பலன் தெரியும்.

வாழ்க்கையில் கொஞ்சம் கஷ்டப்பட்டு முன்னேறியவர்களாக இருந்தால், அவர்கள் கஞ்சத்தனம் கொண்டவர்களாக மாறிவிடுவார்கள். நமக்கு கிடைக்காத ஒரு பொருள் நமக்கு கிடைத்திருக்கிறது. அதை யாருக்கும் கொடுக்கக்கூடாது. நம்மிடமே வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சிலர் நினைப்பது உண்டு.

அதுதான் பணம். உங்கள் கையில் வரும் பணத்தை கொஞ்சம் இல்லாதவர்களுக்கும் கொடுக்கும் பழக்கம் உங்களுக்கு வரவேண்டும். இல்லை, இல்லை என்று சொல்வதை நிறுத்திவிட்டு, இல்லாதவர்களுக்கு கொடுக்கும் அளவிற்கு நம் கையில் பணம் உள்ளது என்பதை நினைத்து கடவுளுக்கு நன்றி சொல்லி இல்லாதவர்களுக்கு, கொடுப்பதை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள்.

வாழ்க்கையின் எந்த சூழ்நிலையிலும், 'நம் ஆசை நிறைவேறிவிட்டது' என்று அப்படியே உட்கார்ந்து விடக்கூடாது. எப்படியாவது இருக்கும் நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு உயர்ந்து விட வேண்டும் என்ற எண்ணம் நம் மனதிற்குள் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்.

வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு ஓடிக்கொண்டே இருங்கள். உங்கள் வாழ்க்கையை தொலைத்துவிட்டு ஓடக்கூடாது.

வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு ஓடுங்கள். காசு மட்டும்தான் வாழ்க்கையா? என்ற கேள்வியை உங்கள் மனதிற்குள் கேட்டுக் கொண்டு ஓடுங்கள்.

விடயம் இருக்கிறது. நாளைக்கு தேவையான பணம் உங்கள் கைகளில் இருந்தால், நீங்கள் மன அழுத்தம் இல்லாமல், உங்களுடைய எண்ணங்களை எந்தவித சேதாரமும் இல்லாமல் செயல்படுத்த முடியும். கையில் காசு இல்லை என்றால், எண்ணங்கள் சிதறும், மன அமைதி கிடைக்காது. பயம் ஏற்படும். நடுக்கம் ஏற்படும். செய்யும் வேலையில் தடுமாற்றம் உண்டாகிவிட்டால் தோல்விதான்.




(அடுத்த நாள் செய்ய வேண்டிய வேலையில் பாதியை, இன்றே கொஞ்சம் கஷ்டப்பட்டு செய்து வைத்து விட்டோம் என்றால், அடுத்த நாள் செய்யும் வேலை நமக்கு இன்னும் சுலபமாகி, அன்று நம்முடைய வேலை செய்யும் திறனானது இரண்டு மடங்கு அதிகரிக்கும்.

இதை சோதித்துப் பாருங்கள். புரிகிறதா? நாளைக்கான வேலையை இன்றே செய்து வைத்தால், அடுத்த நாளைக்கான வேலை செய்யும் ஆற்றல் அதிகரிக்கும். நாளைக்கு தேவையான பணத்தை இன்றை கையில் வைத்துக்கொண்டால், அடுத்தநாள் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆற்றல் தானாகவே அதிகரித்துவிடும்.).

நம் மனதை மாற்றும் எத்தனையோ வகையான நல்ல புத்தகங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு புத்தகத்தை படிக்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டால் நம் மனது இப்போது பூத்த பூ போல அழகாக இருக்கும். தனியாக அமர்ந்து இருக்கும் போது நம்முடைய வாழ்க்கையை பின்னோக்கி யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு வருடத்திற்கு முன்பு நாம் எப்படி இருந்தோம்? இரண்டு வருடத்திற்கு முன்பு நாம் எப்படி இருந்தோம்? இப்போது இவ்வளவு முன்னேறி இருப்பதற்கு என்ன காரணம்? உங்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள்.

வெற்றிக்கான பதில் வெளி நபரிடம் இல்லை. உங்களிடம் தான் உள்ளது. 'நீ என்னவாக நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிவிடுவாய்' இது விவேகானந்தரின் கூற்று.

வீட்டில் அடிக்கடி பார்க்கும் இடத்தில், சுவரில் இதை ஒட்டி வைத்து பார்த்துக்கொண்டே இருங்கள். முடிந்தால் கண்ணாடியில் கூட ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். கண்ணாடியை அடிக்கடி பார்ப்போம் அல்லவா?

உங்களுடைய Mind set தான் உங்கள் வாழ்க்கையை மேலே எடுத்துச் செல்லும். கீழேயும் தள்ளிவிடும். ஆகவே, உங்களது மூளையை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளுங்கள். நேர்மறையாக வைத்துக்கொள்ளுங்கள். எண்ணங்கள் நல்லதாக, புதியதாக தோன்றிக்கொண்டே இருக்க வேண்டுமே தவிர, குறுக்கு வழியையும், கெட்ட வழியையும் என்றும் சிந்திக்க கூடாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லா விடயங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை தான். ஏதாவது ஒரு வழியைபின்பற்றினால்கூட உங்களுடையவாழ்க்கையில் முன்னேற்றம் இருந்து கொண்டே இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

# உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள்

இன்றைய காலத்தில் நிறைய மக்கள் சோம்பேறித்தனத்துடன், கவனக்குறைவோடு, எதைப் பற்றியும் கவலை இல்லாமல் இருக்கின்றனர்.

ஏனெனில் அவர்களுக்கு எந்த ஒரு நினைப்பும் இல்லை. இதனால் அவர்கள் எந்த ஒரு பெரிய பாராட்டையும் பெறப் போவதில்லை.

ஆனால் தோல்வியடைந்து விட்டால் மட்டும், அதை நினைத்து மனதை தளரவிட்டு, வாழ்க்கையை வீணாக்குவார்கள். ஆகவே அவ்வாறு இல்லாமல், மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைப்பதோடு, அடைய வேண்டிய இலக்கை மனத்தில் கொண்டு சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும்.



எந்த நேரத்திலும் நீங்களே முடிவெடுங்கள். இதுவரை சிறுவயதில் உங்களுக்கு உங்கள் வீட்டில் இருக்கும் பெற்றோர்கள் முடிவெடுப்பார்கள்.

இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். இந்த நேரம் தான் நீங்கள் சுயமாக உங்கள் முடிவுகளை எடுக்க வேண்டிய தருணம். எப்போதும் எதையும் செய்ய முடியவில்லை என்று மற்றவர்களிடம் மன்னிப்பு கேட்காமல், பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், நினைத்தால் மட்டும் போதாது, சுயமாக முடிவு எடுக்க தெரிந்திருக்க வேண்டும். எப்போதும் மற்றவர்கள் கூறுவதை கேட்காமல், உங்கள் உள்ளம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உள்ளம் என்ன சொல்கிறதோ, அதை செய்யுங்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பதால், வெற்றியை அடைய முடியாது. ஆகவே உங்கள் மனம் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு, அதன் படி நடக்க வேண்டும். உதாரணமாக, உங்களுக்கு ஏதேனும் ஒரு புதிய விடயங்களை செய்யும்போது, மற்றவர்கள் முடியாது என்று நினைப்பதை கூட, நீங்கள் முழு கவனத்தோடு, செய்துமுடிப்பீர்கள்.



# வாழ்க்கைக்கு இதுதான் வழி

யாராவது உங்களை விட்டு விலகிச் செல்கிறாரா? அவர்கள் தான் உங்களுக்கு தனியாக இருப்பது எப்படி என்று கற்றுக் கொடுக்கிறார்கள்.

எவ்வுளவு நட்பு இருந்தாலும் வாழ்கைப்பாதையில் ஓட வேண்டியது நாம் மட்டும்தான். மற்றவரை நம்பி தொழில் தொடங்கும் யாரும் முன்னேற மாட்டார்கள். தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு. உறவுகள் பாலமாவதும் பாரமாவதும் நம் நடத்தையைப் பொறுத்ததுதான்.

இல்லாள் இல்லையெனில் இல்லறம் இல்லை. பெற்ற மக்களே ஆனாலும் நம் எல்லைகளில் வாழ்வதே அமைதியைத் தரும்.

பொருள்கள் மீதும் இதர சுகங்கள் மீதும் மோகம் கொள்வது சுய ஆற்றலையே அறியச்செய்ய முடியாமல் போகலாம்.

பணம் தற்போதைய காலத்தில் மிகப் பெரிய காரணி, அது இல்லை என்றால் நீங்கள் இல்லை.

அந்த பணத்திற்காக நீங்கள் ஓடும் போது ஆரோக்கியம் போனால், எவ்வளவு பணம் இருந்தாலும் எல்லாம் போனது தான்.

யாராவது உங்களை எரிச்சல் அடையச் செய்கிறார்களா? அவர் தான் உங்களுக்கு பொறுமையை போதிக்கிறார்.

யாராவது உங்களிடம் அதிகமாக கோபப்படுகிறார்களா? அவர்கள் தான் உங்களுக்கு மன்னிப்பு என்பது என்ன என்பதையும், இரக்கம் என்பது என்ன என்பதையும் போதிக்கிறார்.

உங்கள் மீது அதிகாரம் செலுத்தும் எதுவும் உங்களுக்கு அதை நீங்கள் எப்படி பெறுவது என்று போதிக்கிறது. நீங்கள் வெறுக்கும் எதுவுமே உங்களுக்கு நிபந்தனையற்ற அன்பை போதிக்கிறது.

நீங்கள் எதைக் கண்டு பயந்தாலும் அது உங்களுக்கு தைரியத்தை கொடுத்து பயத்தை போக்கும் வித்தையை கற்பிக்கிறது.

உங்களால் கட்டுப்படுத்த முடியாத எதுவுமே உங்களுக்கு எப்படி அதை அப்படியே எடுத்துக்கொள்வது என்பதை போதிக்கிறது.

இப்படி எல்லாமே அதன் எதிர்பதத்தில் உள்ளது. இந்த கேள்வியை போல அருவருப்பான உண்மை NOT அழகான உண்மை

# மாகாண சபைத் தேர்தலை நடத்தக்காரணம் அழுத்தம்!

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



என்னுடைய சட்டமூலத்தை உபயோகித்து ஒரு சட்ட திருத்தத்தை உடனடியாக செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தை பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (சனிக்கிழமை) ஊடகவியலாளர்கள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் முறை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்-

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத் தெரிவுக்குழு தேர்தல் முறை மறுசீரமைப்பு பற்றிய கூட்டம் நடைபெற்றது. இந்த தெரிவுக்குழுவிற்கு தற்போது புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக்கூட்டத்துக்கு அவர் வருகை தந்திருந்தார்.

இந்தக் குழு சந்திக்க ஆரம்பித்ததிலிருந்து மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதை நாங்கள் சிலர் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். அதை நகர்த்துவதில் உள்ள சட்ட சிக்கல்கள் சம்பந்தமாக ஒவ்வொரு தடவையும் பிரஸ்தாபிக்கப்படும். ஆனாலும் ஒரு சிறிய சட்ட திருத்தத்தின் மூலமாக முன்னர் இருந்த தேர்தல் முறையையே பின்பற்றி தேர்தல் நடத்த முடியும் என்ற கருத்தை நான் வெளிப்படுத்தியிருந்தேன். அதற்கான ஒரு சட்ட மூலமும் 2019 ஆம் ஆண்டு நான் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தேன்.

அதன் அடிப்படையில் இது செய்யப்படலாம் என்ற கருத்து கூறிய போது சட்ட மா அதிபருடைய ஆலோசனை பெறப்பட்டது. இறுதியாக சட்ட மா அதிபரும் அந்த முறையிலும் செய்யலாம் என்ற ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த பின்னணியிலே தான் வெள்ளிக்கிழமை கூட்டத்துக்கு வந்திருந்த பஸில் ராஜபக்ஷ வெகு விரைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்று அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாக அறிவித்தார். தங்களுக்கும் மாகாண சபைத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற தேவையும், அழுத்தங்களும் இருப்பதாக கூறினார். இது இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வந்து சென்றதன் பின்னர் இதை கூறியுள்ளார். இது எப்படியாக இருந்தாலும் மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்பது எங்களுடைய நிலைப்பாடாகத் தொடர்ச்சியாக இருந்து வந்து கொண்டிருக்கின்றது.

ஆகையினாலே என்னுடைய சட்டமூலத்தை உபயோகித்து ஒரு சட்ட திருத்தத்தை உடனடியாக செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தை பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

நான் தயாரித்திருந்த சட்ட மூலத்தை தற்போது சிறீலங்கா பொதுஜன பெரமுன செயலாளரிடம் நான் கொடுத்திருக்கின்றேன். அமைச்சரவை இது தொடர்பில் ஆலோசித்து ஒரு முடிவெடுத்து அப்படி செய்வதாக இருந்தால் வருகின்ற நாள் களிலே அதனை வர்த்தமானியில் பிரசுரித்து ஓர் அரசாங்க வரைவாக சட்டமூலமாக அதனைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக கனடாவில் தனியார் உறுப்பினர் பொதுச்சட்டம்

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக கனடாவின் ஒன்றாறியோ சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தனியார் உறுப்பினர்கள் பொதுச்சட்டம் குறித்து இலங்கை கவலை வெளியிட்டுள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினனை அமைச்சில் சந்தித்தபோதே, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் நிலைப்பாட்டை இவ்வாறு தெரியப்படுத்தியுள்ளார்.

இதன்போது அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் கூறியுள்ளவை வருமாறு-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஆற்றிய உரையில் கூறப் பட்டுள்ளதைப் போன்று பல தசாப்த கால மோதலைத் தொடர்ந்து, சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதற்கான முயற்சிகளை இலங்கை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில், இலங்கை தொடர்பாக கனடாவின் ஒன்றாறியோ சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தனியார் உறுப்பினர்கள் பொதுச்சட்டம் கவலையளிக்கிறது.

இதேவேளை கனடாவில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட அமைப்பாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட கனேடிய உயர்ஸ்தானிகர், 'ஒன்றாறியோ சட்டமன்றத்தின் தீர்மானமான இந்த விடயம், அரசியலமைப்பு சார்ந்த கேள்வி என்ற வகையில் நீதித்துறையின் செயற்பாட்டில் உள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய சட்டத்தை நிறைவேற்றாமல் மாகாண சபைத் தேர்தல் இல்லை

### அடித்துக்கூறுகின்றார் சட்ட மா அதிபர்

நாடாளுமன்றில் புதிய சட்டத்தை நிறைவேற்றாமல் எந்தவொரு முறையிலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தெரிவுக் குழு கூட்டத்திலேயே அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செயற்பட்டு வரும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் உள்ளது.

எனினும், இந்த சட்ட நிலைமை ஒரு தடையாக இருப்பதை தினேஷ் குணவர்தன, குழு உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்டினார்.

## வடக்கு மாகாண புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கும் இடையில் சந்திப்பு



வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதிபொலிஸ்மா அதிபர் பிரியந்த சந்திர ஶ்ரீ, மன்னார் மாவட்ட செயலகத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்டான்லி டிமெல்லை சந்தித்து, கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டார். இதில், மன்னார் மாவட்டத்தின் சமகால நிகழ்வுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டமையுடன் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வைத்தியர்களின் ஓய்வு வயது 63! வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது

அரசாங்கம் பதிவு செய்த வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## மாப்பாண முதலியார் யாழ்ப்பாணச் சொத்து!

குடையோடு வருவார் குனிந்தபடி நடப்பார்
குறையில்லா நல்லூரை கொண்டுமே வந்தார்
எளிமையாய் இருப்பார் இறைவனை நினைப்பார்
எல்லோர் மனதிலும் நிறைகிறார் மாப்பாணர்

அடக்கம் அவரிடம் அடைக்கலம் ஆனது
அமைதியை விரும்பி அவருமே ஏற்றார்
ஓரமாய் நிற்பார் ஒதுங்கியே நிற்பார்
யாரையும் பாரார் நல்லூரானையே பார்ப்பார்

சத்தம் போடார் சட்டம் உரைக்கார்
சகலதும் சிறப்பாய் நடத்திடும் அங்கு
நித்தியம் பூசை நிமிடம் தவறாது
பக்தியாய் யாவும் பாங்குற நிகழும்

ஆளுமை என்பது அவரிடம் நிறைந்தது
ஆணவம் என்பது அகன்றுமே நின்றது
ஆண்டவன் சன்னதி அவரிடம் ஆனது
அந்தக் கந்தனும் ஆசியை அருளினான்

மாப்பாண முதலியார் யாழ்ப்பாணச் சொத்து
மனமெலாம் முருகனை இருத்தியே வைத்தார்
நிறைவுடை வாழ்வை நிறைவுறச் செய்தார்
நிமலனும் அவரை தன்னிடம் அழைத்தான்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேர்ண் .... ஆஸ்திரேலியா

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2021இல் வெளியிடப்பெற்றது.